
மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த

# சிவபுராணம்

மூலமும் உரையும்



வெளியீடு

ஈழத்துச்சிதம்பரம்

மார்கழி ஆறாம் திருவிழா உபயகாரர்கள்

2016 மார்கழி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

**மாணிக்கவாசக சுவாமிகள் அருளிச்செய்த**

# சிவபுராணம்



**வெளியீடு**

**ஈழத்துச்சிதம்பரம்**

**மார்கழி ஆறாம் திருவிழா உபயகாரர்கள்**


**2016 மார்கழி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

ஓம் நமசிவாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம், கந்தர்மடம்
# ஸ்ரீ சிவகுருநாத குருபீடம் வேதாந்த மடம்
# ஸ்ரீமத் மகாதேவ சுவாமிகள் ஆச்சிரமம்
# வழங்கிய ஆசிச் செய்தி

சைவ அபிமானிகளே,

திருமுறைகள் எம் வாழ்வைச் செம்மைப்படுத்தக் கூடியவை. நோய்களைக் களைந்து எம்மை நலமாக வாழவைக்கும் சக்தி வாய்ந்தவை. (திருமுறைகள் வேதங் களின் சாரம்) எனக் காசிவாசி செந்திநாதையர் அவர் கள் சொல்லியிருக்கின்றார்கள். சமய குரவர் நால்வரும் திருமுறையை ஓதி எவ்வளவோ அற்புதங்களைச் செய் திருக்கின்றார்கள். அத்தகைய திருமுறைகள் தினந்தோ றும் காலையும் மாலையும் வீடுகளிலும், ஆலயங்க ளிலும் ஓதப்படவேண்டியவை திருமுறைகளைப் பொருட் பிழைகள் இன்றி அனைவரும் படித்து உங்களதும், உங்களைச் சார்ந்தவர்களதும், உலகத்தவர்களதும் நல் வாழ்விற்கு வழி செய்யுங்கள்.

திருமுறைகள் அனைவரது கைகளிலும் சேரவேண் டும் என்னும் நல்ல எண்ணத்தோடு ஒவ்வொரு திருமு றைகளினதும் முதற் பதிகத்தினைத் தாங்கி இந்நூல் வெளிவருகின்றது. அந்த வகையில் வெளியீட்டாள ரும், படிப்பவர்களும் வையத்தில் நல்வாழ்வு வாழ; திருவருளையும், குருவருளையும் வேண்டிப் பிரார்த் திக்கிறோம்.

"மேன்மை கொள் சைவ நீதி விளங்குக
உலகமெல்லாம்"

**எட்டாவது குருபீடாதிபதி**
**ஸ்ரீமத் வேதவித்தியாசாகரர் சுவாமிகள்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சொற் செல்வரின் வாழ்த்துரை

## மண்ணில் நல்லவண்ணம் வாழலாம்

இறைவனுக்குப் பிரியமானவை இசை அர்ச்சனைகளே. செந்தமிழால் இறைவனை அர்ச்சித்த திருமுறைகளுக்கு நிகராக வேறு எதுவும் இல்லை. சுந்தரமூர்த்தி சுவாமிகளைத் தடுத்தாட்கொண்ட சிவப் பரம்பொருள் அர்ச்சனைப் பாட்டேயாகும். ஆதலால் "சொற்றமிழ் பாடுக" என்றார். இச்செய்தியை சேக்கிழார் சுவாமிகள் திருத்தொண்டர் புராணத்தில் அற்புதமாக எடுத்துரைத்தார். "தூமறை பாடும் வாயால் தமிழால் என்னை அர்ச்சனை செய்" என இறைவன் வேண்டிய வேண்டுதல் பெருமைதரும் விடயமாகும்.

பன்னிரு திருமுறைகளும் காலங்கடந்தும் வாழும் தகுதி பெற்றவை. பலநூறு ஆண்டுகளாக எம் சந்ததியாற் பாதுகாக்கப்பட்டு வருபவை எவர்க்கும் ஏக காலத்திற்கும் பயன் தருபவை. திருமுறையை யார் உச்சரிக்கின்றார்களோ, செவியால் கேட்கின்றார்களோ அவர்கள் உயர் நன்மைகள் பெறுவர். இது முழுவதும் உண்மை. திருமுறைகளைத் தினமும் உச்சரித்தும், பிறர் பாடக் கேட்டும் மெய்யுருகும் அன்பர் உயர்திரு. K.K.K.சிவபாலன் அவர்கள் பன்னிரு திருமுறைகளில் உள்ள முதற் பாடல்களை எடுத்து இந்நூலிலே தொகுத்துள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மணிவாசகரின் சிவபுராணத்தை அனைவரும் பொருளுணர்ந்து கற்கவேண்டும் என்ற நோக்கின் பொருள் விளக்கத்துடன் இங்கு வெளிப்படுத்தியுள்ளார்.

சில தெய்வீக வரலாறுகளை அடியவர்கள் அறிவதற்காக இந்நூலிலே சேர்த்துள்ளார். இம்முயற்சி பாராட்டுக்குரியது. தான்பெற்ற சில அனுபவங்களைப் பிறரும் அறிந்து இன்புற வேண்டும் என இந்நூலாசிரியர் கருதுவது சிறப்புக்குரியது.

21வது நூற்றாண்டில் எம் சமூகம் இயந்திரம்போல இயங்கினாலும், மனிதம் மனிதமாக வாழ்வதற்கு ஆத்மீகச் சூழல் அத்தியாவசியமாகும். ஆத்மீகம் அல்லாத வாழ்வு ஆறுதல் இல்லாதது; அமைதி அறியாதது; அந்தரமானது. தெய்வீக நிழலில் நிற்பவருக்குத் தீது இல்லை என்பதை அனைவரும் உணரவேண்டும். இந்நூல் எமது சமூகத்திற்கு நன்கு பயன்தரத் துர்க்கா தேவியைப் பிரார்த்தித்து வாழ்த்தி அமைகிறேன்

**கலாநிதி ஆறு.திருமுருகன்**

*(தலைவர், ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.*

*தலைவர், சிவபூமி அறக்கட்டளை)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

சிவபெருமான் திருவடியிற் சிரம்பதித்து உளம் நிறைந்த "ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெரும் சோதியே" சிவனே என மொழி வழுத்தி, சிவபுராணம் எனும் சிவனது அநாதி முறைமையான பழைமையை" யாவரும் அறியவேண்டும் எனும் ஆவல் மீதூர, சிவ புராணம் எனும் புராணங்கள் அனைத்திலும் தொன்மை யான பழைமையை அறிய, திருவாதவூரராம் மாணிக்க வாசக சுவாமிகளின் தோத்திரத்தைப் பதிப்பித்து அளிப் பதில் உள நிறைவு பெறுகின்றேன். 'ஓம் நமசிவாய".

'விண்ணாகி மண்ணாகி மிக்காய் விளங்கொளியாய்' விண் ஆகாமல் இருந்தால் எதுவும் தோன்றவே முடி யாத 'விண் ஆகி, மண் ஆகி, மிக்காய் விளங்கொளியாய்" விண் ஆகியபின் மண்ஆகின்ற (தோற்றம் பெறுகின்ற) காட்சி நிகழ, மிக்காய் விளங்கு ஒளியாய்ப் பேரொளி மின்னும் அற்புதம் எண்ணவே இலாதானாக எம்பெரு மான் படைப்புத் தொழிலை அருள்கின்றான்.

'தோற்றச் சுடரொளியாய் சொல்லாத நுண்ணு ணர்வாய்" அண்டம் கடந்த இறைவனின் செயற்பாடு புவியில் உயிரினங்களை தோற்றுவிக்கிறது. "புல் ஆகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகி" இத் தொடர்கள் செல்லாஅ நின்றவித் தாவர சங்கமத்துள் எல்லாப் பிறப்பையும் பிறந்து இளைத்த மாணிக்கவாசக சுவாமி களைப் பிறவிப்பிணி ஆகிய பிறப்பிறப்பற்ற நிலையா கிய 'மெய்யே உன் பொன்னடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்" என, இறைவனுடன் (சிவபுராணத்தில் 32வது சிவவரி மணிவாக்கின் அதே அருள் வயதில்) நிறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெய்திய நித்தியத்தை உணர்த்துகிறது.

சிவபுராணத்தைப் பாடி முடித்து வழிபடுவதை மட்டும் பக்தி எனக் கருதாதீர்கள். அதன் பொருள் உணர்ந்து படியுங்கள். சிவபெருமான் இறைவன், அவன் திருவடியிற் சேர்ந்த நித்தியம்பெறப் பிறவியைப் பயன்படுத்துவீர்கள். மாணிக்கவாசக சுவாமிகள் பாடியருளிய திருவாசகங்கள் அனைத்துமே பொருள் விளங்கிப் படிக்க வேண்டியவை. அப்பொழுதுதான் "தென்னாடுடைய சிவனே எந்நாட்டவர்க்கும் இறைவன்; அவன் 'ஏகன் அநேகன் இறைவன்' தமிழ் தெளிந்தவர்களுக்கு 'ஒன்றே குலம் ஒருவனே தேவன்" தமிழோ சைவ நெறியோ, தமிழ்ப் பண்பு தெரியாத வேற்று இனத்தவர்களுக்குக் கடவுள் எப்படிக் காட்சி கொடுப்பார்?

தாயை இழந்த பன்றிக் குட்டிகளுக்குத் தாயாகிப் பால் கொடுத்தவர் அல்லவா இறைவன். உயிர்களுக்கு உறவாக; இறைவன் அந்த உயிரினத்தவன் அல்லவா?

நீங்கள் உங்கள் உள்ளத்தில் இறைவனைத் தரிசித்தால் உள்ளம் பெருங்கோயில். ஊன் உடம்பு ஆலயம்; தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம், வள்ளல் பெருமானுக்கு வாய் கோபுர வாயில் ஆகையால் நீங்களும் கடவுளாகச் சிவனடி பெறவேண்டின், அதற்கு ஞானம் பெறப் பொருள் விளங்கிப் பாடுங்கள். மும்மலங்கள் மறைந்து, ஐம்பூதங்கள் அடங்கி, மெய்யொளி அரவணைக்கும்; ஆகர்ஷிக்கும்.

தற்போது ஆலயங்களிலும் வேறு இடங்களிலும் சிவபுராணச் சிறப்பை உரைக்கும் பாயிரப் பாடலான ''தொல்லையிரும் பிறவி'' என்ற பாடலை காப்புப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடல் போலக்கருதிப் பாடுகிறார்கள். அது மணி வாசகர் வாக்கல்ல. அதை திருவாசகத்துள் ஓதுதல் தவிர்க்கப் பெறல் வேண்டியது மட்டுமல்ல அது தவறானதுமாகும்.

இந் நூலுக்கு அன்பளிப்பாக வழங்கும் ரூபா 50 /= ஐ தங்களது குல தெய்வத்துக்குச் செலுத்தி திருவரு ளுக்குப் பாத்திரமாகுங்கள்

"ஓம் நமசிவாய"

**க.கு.க. சிவபாலன்,**
அடியாருக்கு அமுதூட்டும் அண்ணலார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்

## எட்டாந் திருமுறை

### மாணிக்கவாசகசுவாமிகள் அருளிச் செய்த

# திருவாசகம்

## திருப்பெருந்துறையில் அருளியது

திருச்சிற்றம்பலம்

## நூற் சிறப்பு

தொல்லை இரும் பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லலறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

முடிவில்லாத வீடுபேற்றை அளித்தருளும் திருவாதவூரின்கண் தோன்றியருளியவர், எம் தலைவராகிய மாணிக்கவாசகர். அவர் திருவாக்காய்த் தோன்றியது தேனினும் இனிய திருவாசகம். அது உயிரைச் சூழ்ந்துள்ள பழமையான பெரிய பிறவிக் கட்டினை நீக்கும்; துன்பத்தை அழிக்கும்; பேரின்பத்தையும் உண்டாக்கும்.

## சிவபுராணம்

*(சிவனது அனாதி முறைமையான பழைமை)*

### கலிவெண்பா

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க

**திருத்தாள்கள் வாழ்க! *( 1 – 5 )***

திருவைந்தெழுத்தான "நமச்சிவாய" (ஓம் நமசிவாய) என்னும் மந்திரம் இவ்வுலகில் என்றும் நிலைபெறுவதாக! அந்தத் திருஐந்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெழுத்தின் வடிவமாக விளங்குகின்ற சிவபெருமானுடைய திருத் தாள்கள் என்றும் நிலைபெறுவதாக! கண்ணிமைக்கின்ற சிறுபொழுது நேரம்கூட என் மனதில் இருந்து நீங்காதவன் அப்பெருமான். அத்த கையோனின் திருவடிகள் வாழ்வதாக! திருப்பெருந்துறை என்னும் பதியில் எழுந்திருளியவன்; எளியோனாகிய என்னை ஆட்கொண்டு, என் ஆத்மா பசுத் தன்மையை நீக்கி அருளியவன்; ஞான குருமூர்த்தி யாய் எனக்குக் காட்சி தந்து அருளிய அவன் திருத்தாள்கள் வாழ்க!.

ஆகமங்களின் உண்மைப் பொருளாய் நின்றவன்; இனிமையான திருவருளை எப்பொழுதும் தருகின்றவன்; ஒப்பில்லாத தன்மையை உடைய, தானே முழுமுதற் பொருளாய் நின்றவன்; அடியார்களின் விருப்பத்தின் பொருட்டுப் பல வடிவங்களாகவும் விளங்கியவன்; நீக்கமற எங்கும் நிறைந்துள்ள அப்பெருமானின் திருவடிகள் என்றும் வாழ்க.

வேகங் கெடுத்து ஆண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்புஅறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும்; கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க

### மேம்படுவதாக (6 – 10)

ஆணவ மயமான என்னுடைய மனவேகத்தைத் தொலைத்து எனக்கு அருள்புரிந்தவன்; என்னை அடிமையாக உடைய அப்பெருமானின் இணையற்ற திருவடிகள் மேன்மைப்படுவதாக; உயிர்களுடைய பிறவி என்னும் கொடிய தளையை (பிணைப்பை) வேரறுக்கும் தலைக் கோலக்கோலத்தை உடையவன்; அவனுடைய வீரக்கழல் அணிந்த திருவடிகள் மேம்படுவதாக! தன்னை வணங்காத, சிவநே யத்திற்குப் புறம்பானவர்களுக்குத் தானும் அணுக முடியாத தூரத்தில் இருக்கும் தாமரை மலர்கள் போன்ற பெருமானின் திருவடிகள் மேம்படுவதாக! கைகூப்பி (அதாவது நமது நெஞ்சின் உள்ளத்தாமரை யில் வீற்றிருக்கும் மனத்தைக் குறித்து வணங்குவது) வணங்குபவர்க ளும், மனம் ( மகிழக் கண்டு களிக்கும்படி அருள்செய்யும் அம்மன்ன னின் திருவடிகள் மேம்படுவதாக! தன்னுடைய கைகளைக் குவித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வணங்குகின்ற (இருகைகளையும் சிரம்மேல் ஒருஅடி உயர்த்தி எம்பெருமான் திருவடிகளைக் கைகளாற் பற்றி) தம் அடியவர்கள் மேன்மையடையும்படி செய்யும் சிறப்புடைய பெருமானின் திருவடிகள் மேன்மையடைவதாக.

ஈசன் அடிபோற்றி! எந்தையடி போற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்புஅறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடிபோற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி

### கருணை உடையானுக்கு வணக்கம் *(11 – 16)*

ஈசனுடைய திருவடிக் கமலத்திற்கு வணக்கம்! என் தந்தையைப்போன்றானின் திருவடிகளுக்கு வணக்கம்! ஒளி பொருந்திய மேனியை உடையானின் திருவடிகளுக்கு வணக்கம்! சிவபெருமானின் சிவந்த பாதங்களுக்கு வணக்கம்! அடியவர்களுடைய அன்பிலே நிலைபெற்று நின்ற குற்றம் அற்றவனின் திருவடிகளுக்கு வணக்கம்! வஞ்சகமாகிய மாயப் பிறவியினை அறுத்து எறிகின்ற அரசனுடைய திருவடிகளுக்கு வணக்கம்! சிறப்புமிக்க திருப்பெருந் துறையின்கண் எழுந்தருளிய, நம்முடைய தேவனான இறைவனின் திருவடிகளுக்கு வணக்கம்! தேவாமிர்தம் போன்ற தெவிட்டாத இனிமையைத் தருகின்ற மலைபோன்ற பெருங் கருணையுடையானுக்கு வணக்கம்!

சிவன் அவன்என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணம்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்துஎய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பழைமையைச்சொல்வேன் (17 – 22)**

நெற்றிக் கண்ணை உடையவன் சிவபெருமான். அவன் தன்னுடைய அருட் கண்ணை எனக்குக் காட்டி அருள் செய்தான். பின் அவனே என் சிந்தையுள் நீங்காது நிலைபெற்றான். அவ்வருளினாலேயே அவன் திருவடியையும் வணங்கும் பேற்றினைப் பெற்றேன். என்னுடைய உள்ளமானது மகிழ்வடையும் படியும், என் முற்பிறவியின் பழவினைகள் யாவும் மாயும்படியும் அருள் செய்தான். எனவே சிவபெருமானது அநாதி முறைமையான பழைமை முழுவதையும் நான் முறைப்படி கூறுவேன்.

விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கு
ஒளியாய்
எண்இறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்

**வகையறியேன் (23 – 25)**

விண்ணுலக மெங்கும் நிறைந்ததும் மண்ணுலகில் நிலைபெற்றிருப்பதும் அவற்றிற்கு அப்பாலும், ஒளிவடிவமாய் விளங்கி நிற்கின்ற மேலானவனே! அளவிட்டுச் சொல்லமுடியாத பெரும் சிறப்பினை உடையவனே! பொல்லாத கொடிய வினையுடையேனாகிய நான், அத்தகைய பெரும் சிறப்பினையெல்லாம் புகழ்ந்து பேசுவதற்கான வகையினை அறிந்திராத தன்மை உடையன்.

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளைப்படைந்து விட்டேன் (26 – 32)

கல்லாகிக் கிடந்தும், புல்லாகியும், பூண்டாகியும், புழுபோன்ற சிறிய உயிர்களாகியும், மரமாகியும், பலவகையான மிருகங்களாகியும், பறவைகளாகியும், பாம்பாகியும், மனிதராகியும், பேய்களாகியும், பூதங்களாகியும், வலியோன் அசுரராகியும், முனிவராகியும், தேவராகியும் இயங்குகின்ற, இந்த தாவர சங்கமத்துள், எல்லாப் பிறவிகளும் சென்று, பின்னர் இளைப்படைந்து விட்டேன் எம்பெருமானே! இப்பொழுது உண்மையாகவே உன்னுடைய சிறப்பான பொன்னடிகளைக் காணும் பேறுபெற்றேன்; இதன் பயனாய் வீடுபேற்றையும் அடைந்தேன்.

உய்யஎன் உள்ளத்துள்; ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே

## ஞான குருவானவனே (33 – 40)

யான் உய்யும் பொருட்டு என் உள்ளத்தில் பிரணவ வடிவமாய் நின்ற உண்மைப் பொருளானவனே! குற்றமற்றவனே! இடப வாகனத்தை உடையவனே! வேதங்களும் உன்னை அறிய முடியாமல் "ஐயனே" என்று துதித்துக் கொண்டு இருக்கின்றன. ஆழ்ந்து அகன்ற நுட்பமான பொருளானவனே! வெப்பமான தன்மை உடையவனே! குளிர்ச்சிபொருந்தியவனே! எவ்விடத்தும் உயிர்போலக் கலந்து நிற்கின்ற குற்றமற்றவனே! நிலையற்ற பொருள் யாவும் என்னை விட்டு நீங்கிப் போகுமாறு, எனக்கு ஞானகுருவாக எழுந்தருளிய மேலோனே! உண்மையான மெய்யுணர்வின் வடிவமாகி என் முன்னே ஒளிவீசுகின்றசுடர்போன்றவனேஎத்தகையஅறிவும்இல்லாதவனாகிய எனக்கு பேரின்பத்தை அள்ளித் தந்த பெருமானே! அஞ்ஞானம் எனும் கொடும் துன்பத்தை நீக்குகின்ற நன்மையான அறிவை உடையோனே!


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கம் அளவுஇறுதி இல்லாய் அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலோடு நெய்கலந்தாற் போலச்
சிறந்துஅடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்

**பிறவி நீக்கும் பெருமான் ( *41 – 48)***

மூவேறு தன்மைகளையுடைய ஆக்கமும், நிலை பெறுதலும், அழிதலும், நின்னிடத்தில் இல்லாதவனே! இருப்பினும் எல்லா உல கங்களையும் தோற்றுவிப்பவன் நீயே! அதனைக் காத்து நிற்பவனும் நீயே! அதனை அழிக்கின்ற தன்மையுடையவனும் நீயே! அருளா ளனே! என்னைப் பிறவிகள் தோறும் ஆட்படுத்தியவனே! பின்னர் உன் அருளால் ஆட்கொண்டு உன் தொண்டில் ஈடுபடுத்தியவனே! பூவின்கண் காணப்படும் நறுமணம்போல நுட்பமான பொருளாய் இருப்பவனே! மனம், வாக்குப் போன்ற இவற்றையெல்லாம் கடந்து நிற்கின்ற வேதப் பொருளானவனே! கறந்த புனிதமான பாலுடன், சர்க்கரையும் நெய்யும் சேர்த்துக் கலப்பதால் உண்டாகும் சுவையி னைப்போல சிறப்புற்று அடியவர்களின் உள்ளத்தில் இன்பம் ஊற்றெனப் பெருக்கெடுக்க அவர்கள் எடுக்கின்ற பிறவித்தளையை ஒழிக்கின்ற எம்பெருமானே!.

நிறங்கள் ஓ ரைந்து உடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்து எங்கும் புழுஅழுக்கு மூடி
மலம்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலம்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே

**தத்துவப் பொருள் நீயே *(49 – 61)***

ஐந்து வகையான நிறங்களையுடையவனே! தேவர்கள் ஏற்றித் துதிக்க அவர்களுக்கெல்லாம் மறைந்து இருப்பவனே! எம்பெருமானே! வலிமையான வினைக்கட்டிற்கு ஆட்பட்டுக் கிடந்தவன் நான். முற்றிலும் மறையும்படி என்னை மூடியிருந்த அறியாமை என்னும் இருளானது, கெடும்படி அருள்செய்தாய். கடத்தற்கரிய இருவினையான புண்ணியபாவங்கள் என்னும் கயிற்றினாற் கட்டுண்டு கிடந்தேன். புறத்தே தோலால் மூடப்பட்டது; உள்ளே நெளிகின்ற புழுக்களும் அழுக்கும் செறிந்த மலம் ஒழுகுகின்ற ஒன்பது துவாரங்களை உடையது. அத்தகைய இழிவான இருப்பிடம் என்று சொல்லத்தக்க இந்த உடலினை எனக்குத் தந்தாய், அத்துடன் என்னுடைய ஐந்து புலன்களும் நான் கலங்கும்படி எனக்கு வஞ்சனை செய்தன. அவற்றுக்கு உட்பட்ட நான் நின்னை விட்டு நீங்கும்படியான மனத்தை உடையவனாக இருந்தேன். உன்னிடம் அன்பு செலுத்தி உள்ளம் கசிந்து உருகுகின்ற நற்செயல் ஏதும் செய்ய இயலாத நிலையில் இருந்தேன். அத்தகைய சிறியோனாகிய எனக்கு, மாசற்ற கருணை உடையோனாகிய நீ அருள் புரிந்தாய். நாயினும் கடைப்பட்டவனாகிக் கேட்பாரற்றுக் கிடந்த எனக்குத் தாயினும் மேலான அன்பினைக் காட்டிய அருள்வடிவமானவன் நீ. இம் மண் மேல் எழுந்தருளி வந்து நினது திருவடியைக்காட்டி அருள் செய்த தத்துவப் பொருள் நீயே!

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆராஅமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்இருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை யாட்கொண்ட எந்தை பெருமானே

## முதலும் முடிவும் நடுவும் அற்றோன் (62 –76)

மாசு மறுவற்ற ஒளியாகிய மரத்தில், சிறந்த இதழ்களுடன் மலர்ந்துள்ள மலர்ச்சுடரே! ஞானகுருவானவனே! தேன் போன் றவனே! அருமையான அமுதம் ஒப்பவனே! சிவபுரத்து நாயகனே! பாசமென்னும் கொடிய தொடர்பை அறுத்துக் காத்தருள் புரிகின்ற ஆசிரியனே! அன்பு ஊற்றெடுக்கும்படி அருள்புரிந்து எனது மனதில் உள்ள தீய எண்ணங்கள் கெட்டழியும்படி நிலைபெயராமல் நின்ற கருணை வடிவமான நதியைப் போன்றவனே! தெவிட்டாத அமுதத்துக்கு ஒப்பானவனே! இத்தன்மைத்தன் என்று அளவிட்டுச் சொல்லமுடியாத பெருமையுடையவனே! உன்னை உணராதவரின் உள்ளத்தில் இருப்பினும் அவர் அறியாத வண்ணம் மறைந்திருக்கின்ற சோதி வடிவானவனே! கலங்காத என் மனத்தையும் நீர் போல் உருகச் செய்தவனே! என் உயிருக்கு உயிர் போன்றவனே! உலகக் கலப்பினால் வந்தடைகின்ற இன்ப, துன்பங்கள் யாவும் இயற்கையிலேயே இல்லாதவனே! நின் அன்பர் பொருட்டு அவற்றை உடையவன் போன்று காணப்படுபவனே! உன்னுடைய அன்பர்களுக்கு, அன்ப னாக விளங்குபவனே! கலப்பின் காரணமாய் எல்லாப் பொருளாக ஆகியும், தன்மையினால் அவற்றிற்குக் கட்டுப்படாமலும் காணப்ப டுகின்ற தன்மையனே! பேரொளியானவனே! விளங்கிக் கொள்ள முடியாத இருளாகவும் தோன்றுபவனே! யாருக்கும் புலப்படாத பெரு மையினை உடையவனே! முதலாக இருப்பவனே! முடிவாகவும், முடிவிற்கும், முதலுக்கும், நடுவாக, இருப்பவனே! இருப்பினும் நினக்கு என்று முதலும், முடிவும், நடுவும், இல்லாதவனே! என்னை இங்கு வரும்படி அழைத்து ஆட்கொண்டு அருளைச் செய்தவனே! எமது தந்தையாகிய பெருமானே!.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரியநோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே

## தெவிட்டாத அமுதம் ( 75 – 83)

மிகுதியான மெய்யறிவின் காரணமாய் உள்ளத்தில் சிந்தித்து அறிபவர் தம் மனத்தாலும் காணமுடியாத காட்சியை உடையவனே! மேலும் நுட்பப்படுத்த முடியாத அளவு இயற்கையிலே நுட்பமாய் விளங்குகின்ற அறிவுப் பொருளே! ஒன்றை நாடிப் போதலும், அதனை அடைந்து நிற்றலும், திரும்ப மீளுதலும், இல்லாத புண்ணியப் பொருளே! எம்மைக் காப்பாற்றுகின்ற காவலனே! காண்பதற்கு அருமை உடைய பேரொளியானவனே! இன்பத்தைத் தருகின்ற ஆற்றின் வெள்ளப்பெருக்குப் போன்றவனே! அப்பனே! மேலான பொருளே! நிலைபெற்ற தோற்றமுடைய ஒளியைப் போன்றவனாகியும் சொல்லாமல் விபரிக்க முடியாத நுட்பமான அறிவாகியும், விளங்குகின்றவனே! பல்வேறுபட்ட மாறுபாடுகளையும் உடைய இவ்வுலகத்தில் வெவ்வேறு பொருள்களாக காணப்பட்டு வந்து, அறிகின்றவனின் அறிவாக விளக்கமுறும் தெளிவானவனே! அந்தத் தெளிவிற்கும் தெளிவானவனே! உண்ண உண்ணத் தெவிட்டாத அமுதம் போன்று என் சிந்தையுள் ஊற்றாய்த் ததும்புபவனே! என்னை அடிமையாகக் கொண்டவனே!

வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்; எம் ஐயா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

## எல்லோரும் போற்றுவர் - *(84 - 95)*

பல்வேறு பட்ட திரிபுகளை உடைய ஊன் உடம்பின் உள்ளே கட்டுப்பட்டுக் கிடக்க இனிமேல் நான் பொறுக்கமாட்டேன். "ஐயனே! சிவனே! ஓலம்" என்று கூவிக் கூவி முறையிட்டு, உன்னை வணங்கிப் புகழ்ந்து, இருந்து, அறியாமை என்னும். இருள் நீக்கி, மெய்யான தன்மையுடையோர் மீண்டும் இவ்வுலகிற் பிறந்து வந்து, வினைக் கொடுமையை அடையாமல், வஞ்சகம் மிக்க ஐம்புலன் களுக்கு இடமான உடம்பாகிய தொடர்பினை முற்றிலும் அழிக்க வல்லானே! ஊழிக்கூத்தினை நள்ளிரவில் ஆடுகின்றவனே! தில்லை யம்பதியில் நடமிடும். கூத்தபிரானே! தென்பாண்டிய நாட்டினை உடையவனே! தொடர்ந்து வந்து துயரத்தைத்தருகின்ற பிறவித் தளையை அறுப்பவனே! ஓலம் என்று சொற்களாலும் புகழ்ந்து உரைப் பதற்கு அரிதானவனே! அவன் திருவடிக்கீழ், அவனை துதித்துப் பாடிய பாட்டின் பொருள் அறிந்து வழிபடுவோர் மற்ற எல்லோராலும் போற்றப்படுமாறு சிவனடி நிழலின் கண் இருப்பவராவர், அத்துடன் சிவபுரத்திலும் சென்று நிலைபெறுவார்கள்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

ஓம் நமசிவாய

திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார் திருவாய் மலர்ந்தருளிய

# தேவாரம்

## முதலாம் திருமுறை

**சுவாமி:** பிரமபுரீஸ்வரர் - **அம்பிகை:** பெரிய நாயகி

**பண் :** நட்டபாடை

திருச்சிற்றம்பலம்

தோடுடைய செவியன்விடை யேறியோர்
தூவெண் மதிசூடி
காடுடைய சுடலைப்பொடி பூசியென்
உள்ளங் கவர் கள்வன்
ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்து.
ஏத்த அருள் செய்த
பீடுடைய பிர மாபுர மேவிய
பெம்மான் இவன் அன்றே.

## இரண்டாந் திருமுறை

**ஆலயம்:** திருப்பூந்தராய்
**சுவாமி:** பிரமபுரீஸ்வரர்- **அம்பிகை:** திருநிலை நாயகி
**பண்:** இந்தளம்

செந்நெல் அங்கழ னிப்பழ னத்தய லேசெழும்
புன்னை வெண்கிழி யிற்பவ ளம்புரை பூந்தராய்
துன்னி நல்லிமை யோர் முடிதோய்கழ லீர் சொலீர்
பின்னு செஞ்சடை யிற்பிறை பாம்புடன் வைத்ததே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூன்றாந் திருமுறை

**ஆலயம் -** கோயில் : சிதம்பரம், தில்லைவனம்
பெரும்பற்றப்புலியூர் பேரம்பலம், சிற்றம்பலம்
கனகசபை நிருத்தசபை இராஜசபை

**சுவாமி:** நடராசர், அம்பலவாணர், கனகசபாபதி,
கூத்தபிரான், திருமூலட்டானநாதர்

**அம்பிகை:** சிவகாமசுந்தரி, உமையம்மை

**பண்:** காந்தரபஞ்சமம்

ஆடினாய்நறு நெய்யொடு பால் தயிர்
அந்தணர்பிரி யாதசிற் றம்பலம்
நாடினாய் இடமா நறுங்கொன்றை நயந்தவனே
பாடினாய்மறை யோடுபல் கீதமும்
பல்சடைப்பனி கால்கதிர் வெண்டிங்கள்
சூடினாய் அருளாய் சுருங்கஎம் தொல்வினையே.

## திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிய

# தேவாரம்

## நான்காம் திருமுறை

**ஆலயம்: திருவதிகை வீரட்டானம்**
திருஅட்டவீரட்டத் தலங்களுள் ஒன்று
திரிபுரத்தை எரித்த வீரச்செயல் நிகழ்ந்த இடம்

**சுவாமி:** வீரட்டானேசுவரர் **அம்பிகை:** திரிபுரசுந்தரி

கூற்றாயின வாறு விலக்ககிலீர்
கொடுமைபல செய்தன நான்அறியேன்
ஏற்றாய்அடிக்கே இரவும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதுஎன் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன்அடி யேன்அதி கைக்கெடில
வீராட் டானத்துறை அம்மானே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஐந்தாம் திருமுறை

**ஆலயம் :** கோயில் *(சிதம்பரம்)*

**முதலாவது திருத்தலம் :** சிதம்பரம், தில்லை

பஞ்சசபைகளில் இது கனகசபை

பெரும்பற்றப்புலியூர்

**சுவாமி:** நடராசப் பெருமான், திருச்சிற்றம்பலம்

உடையார் கனகசபாபதி, கூத்தபிரான்

*(தில்லைக் கூத்தனன்)*

**அம்பிகை:** சிவகாமசுந்தரி

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண்டு இன்புற
இன்னம் பாலிக்கு மோஇப் பிறவியே.

## ஆறாந் திருமுறை

**ஆலயம் -** கோயில்   **ஊர் -** தில்லை, சிதம்பரம்

**எம்பெருமான் :** சிவம் - திருத்தாண்டவம்

**பஞ்சபூதத் தலங்களுள் -** ஆகாயம் ஏனையவை

**மண் -** திருவாரூர்

**நீர் -** திருவானைக்கா

**அக்கினி -** திருவண்ணாமலை

**காற்று** –திருக்காளத்தி

**பஞ்சசபைகளுள்**பொற்சபை, கனகசபைஎன்பர். ஏனையவை

**இரத்தினசபை -** திருவாலங்காடு

**வெள்ளிசபை -** திருஆலவாய்

**தாமிரசபை –** திருநெல்வேலி

**சித்திரசபை –** திருக்குற்றாலம்

### பொன்னம்பலம்

**சுவாமி -** நடராசர், அம்பலவாணர், கூத்தபிரான்,

கனகசபாபதி, சபாநாயகர்

**அம்பிகை -** சிவகாமசுந்தரி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### திருமூலட்டானம்

**சுவாமி** – திருமூலநாதர்

**அம்பிகை :-** உமையம்மை

**பண் :-** பெரியதிருத்தாண்டகம்

அரியானை அந்தணர்தம் சிந்தையானை
அருமறையின் அகத்தானை அணுவை யார்க்கும்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனைமற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவாநாளே.

## சுந்தரமூர்த்தி நாயனார் அருளிச்செய்த

# தேவாரம்

## ஏழாந்திருமுறை

**ஆலயம்:** திருவெண்ணெய் நல்லூர்

**சுவாமி:** தடுத்தாட்கொண்ட நாதர்

**அம்பிகை:** வெற்கண்மங்கையம்மை

**பண் :-** இந்தளம்

பித்தாபிறை சூடீ பெரு
மானேயரு ளாளா
எத்தான்மற வாதே நினைக்
கின்றேன்மனத் துன்னை
வைத்தாய்பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூர் அருட் துறையுள்
அத்தா உனக்(கு) ஆளாய் இனி
அல்லேன் என லாமே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எட்டாந் திருமுறை

## மாணிக்கசுவாமிகள் அருளிச் செய்த

# திருவாசகம்

### திருப்பெருந்துறையில் அருளியது

### நூற் சிறப்பு

### சிவபுராணச் சிறப்பை உரைக்கும் பாயிரப் பாடல்

தொல்லை இரும் பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்லலறுத்து ஆனந்தம் ஆக்கியதே - எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

## சிவபுராணம்

*(சிவனது அனாதி முறைமையான பழைமை)*

**கலிவெண்பா**

நமச்சிவாய வாழ்க நாதன் தாள்வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க
வேகங் கெடுத்து ஆண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பு அறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரம்குவிவார் உள்மகிழும்; கோன் கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க
ஈசன் அடிபோற்றி! எந்தையடி போற்றி
தேசன் அடிபோற்றி சிவன்சே வடிபோற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுரா ணம்தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்து எய்தி
எண்ணுதற்கு எட்டா எழிலார் கழல் இறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கு ஒளியாய்
எண்இறந்து எல்லை இலாதானே நின்பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்யஎன் உள்ளத்துள்; ஓங்கார மாய்நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவுஇறுதி இல்லாய் அனைத்து உலகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே
கறந்தபால் கன்னலோடு நெய்கலந்தாற் போலச்
சிறந்துஅடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓ ரைந்து உடையாய் விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றாற் கட்டிப்
புறந்தோல் போர்த்து எங்கும் புழுஅழுக்கு மூடி
மலம்சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் ளுருகும்
நலம்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில்வஞ் சங்கெடப்
பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆராஅமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கிஎன் ஆருயிராய் நின்றானே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்இருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய்ஞ்ஞானத்தால் கொண்டுணர்வார் தங்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய்நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உண்ணா ரமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன்; எம் ஐயா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டுஇங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாணிக்கவாசகர் திருவாய் மலர்ந்து அருளிய

# திருக்கோவையார்

திருவாசகம் அருளிய மாணிக்கவாசகர் திருக்கோவையார் என்னும் அகப்பொருள் கோவை நூலைப் பாடினார். இதனை திருச்சிற்றம்பலக் கோவையார் எனவும், அடிகள் திருவாய் மலரத் திருச்சிற்றம்பலமுடையானே (சிவபெருமானே பழம்பெரும் அந்தணர் உருவத்தில்) தனது கைபட எழுதியது.

### திருக்கோவை காட்சி

காட்சி என்பது தலைமகளைத் தலைமகன் கண்ணுற்று, இஃதொடு வியப்பென்ற

திருவளர் தாமரை சீர்வளர்
காவிகள் ஈசர் தில்லைக்
குருவளர் பூங்குமிழ் கோங்குபைங்
காந்தள் கொண்(டு) ஓங்கு தெய்வ
மருவளர் மாலையொர் வல்லியின்
ஒல்கி அனநடைவாய்ந்(து)
உருவளர் காமன்தன் வென்றிக்
கொடிபோன்(று) ஒளிர் கின்றதே.
திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமாளிகைத் தேவர் அருளிய

# திருவிசைப்பா

### ஒன்பதாம் திருமுறை

**ஆலயம்:-** கோயில் - தில்லை – சிதம்பரம் ஞானாகாசம் பொன்னம்பலம் (திருச்சிற்றம்பலம்) திருமூலட்டானம்

**சுவாமி:** நடராசப் பெருமான் - திருமூலநாதர்

**தேவி :** சிவகாமியம்மை – உமையம்மை

ஒளிவளர் விளக்கே! உலப்பிலா ஒன்றே!
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே!
தெளிவளர் பளிங்கின் திரண்மணிக் குன்றே!
சித்தத்துள் தித்திக்கும் தேனே!
அளிவளர் உள்ளத்(து) ஆனந்தக் கனியே!
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே.

## சேந்தனார் அருளிய

# திருப்பல்லாண்டு

இத்திருப்பதிகம் - இறைவனைப்பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகிறது. தில்லையைத் தரிசிக்க முத்தி

**பண்** : பஞ்சமம்

மன்னுக தில்லை வளர்கநம்
பத்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருமூலர் அருளிய
## திருமந்திரம்
## பத்தாந்திருமுறை

ஒன்று அவன் தானே; இரண்டு அவன் இன்னருள்
நின்றனன் மூன்றினுள்; நான்கு உணர்ந்தான்; ஐந்து
வென்றனன்; ஆறு விரிந்தனன்; ஏழு உம்பர்ச்
சென்றனன்; தான்இருந்தான்; உணர்ந்து எட்டே.

## பதினோராந் திருமுறை

*இப்பாசுரம் மதுரை மீனாட்சி சமேத ஸ்ரீ சோம சுந்தரக் கடவுள் (திருஆலவாய் உடையார் பாணபத்திரருக்கு உதவி புரியக் கருதி சேரமான் பெருமாள் நாயனாருக்கு எழுதியருளிய திருமுகம் (இச்செய்தி திருவி ளையாடற் புராணத்திலும் உள்ளது).*

## திரு ஆலவாய் உடையார் அருளிய
## திருமுகப் பாசுரம்

மதிமலி புரிமிசை மாடை கூடற்
    பதிமிசை நிலவு பால்நிற வரிச்சிற(கு)
அன்னம் பயில் பொழில் ஆல வாயின்
    மன்னிய சிவன் யான் மொழிதரு மாற்றம்
பரவக் கொண்முப் படியெனப் பாவலர்க்(கு)
    உரிமையின் உரிமையின் உதவி, ஒளிதிகழ்
குருமா மதிப்புரை குலவிய குடைக்கீழ்ச்
    செருமா உனக்கும் சேரலன் காண்க;
பண்பால் யாழ்பயில் பாண பத்திரன்
    தன்போல் என்பால் அன்பால்; தன்பால்
காண்பது கருதிப் போந்தனன்;
    மாண்பொருள் கொடுத்து வரவிடுப் பதுவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சேக்கிழார்

அருளிச் செய்த

பெரியபுராணம் என்னும் **திருத்தொண்டர் புராணம்**

**பன்னிரண்டாம் திருமுறை**

வாழ்த்து

**திருச்சிற்றம்பலம்**

உலகெ லாம் உணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர்சி லம்படி வாழ்த்தி வணங்குவாம்.

என்று மின்பம் பெருகு மியல் பினால்
ஒன்று காதலித் துள்ளமு மோங்கிட
மன்று ளாரடி யாரவர் வான்புகழ்
நின்ற தெங்கும் நிலவி யுலகெலாம்

**திருச்சிற்றம்பலம்**

# ஓம்
# நமசிவாய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் சரவணபவ

முருகன் துணை

## ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகள் அருளிச்செய்த

# திருப்புகழ்

ஐங்கரனை யொத்தமன மைம்புலம கற்றிவள
ரந்திபக லற்றநினை வருள்வாயே
அம்புவித னக்குள்வளர் செந்தமிழ்வ ழுத்தியுனை
அன்பொடுது திக்கமன மருள்வாயே
தங்கியத வத்துணர்வு தந்தடிமை முத்திபெற
சந்திரவெ ளிக்குவழி யருள்வாயே
தண்டிகைக னப்பவுசு எண்டிசைம திக்கவளர்
சம்ப்ரமவி தத்துடனே யருள்வாயே
மங்கையர்சு கத்தைவெகு இங்கிதமெ னுற்றமன
முன்றனைநி னைத்தமைய அருள்வாயே
மண்டலிக ரப்பகலும் வந்தசுப ரட்சைபுரி
வந்தணைய புத்தியினை யருள்வாயே
கொங்கிலுயிர் பெற்றுவளர் தென்கரையி லப்பரருள்
கொண்டுஉட லுற்றபொரு ளருள்வாயே.
குஞ்சரமு கற்கிளைய கந்தனென வெற்றிபெறு
கொங்கணகி ரிக்குள்வளர் பெருமாளே.

ஐந்து கரங்களை உடைய விநாயகமூர்த்தியை ஒத்த மனத்தையும், சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் எனப்படும் ஐம்புலன்களையும் நீக்கி (விலக்கி அடக்கி) - அதன் பயனாகக் கிடைக்கும் இரவு பகல் அற்ற நிலையை அருள் புரிவாயாக.

(இப்) பூமியில் பெருகி வளரும் செந்தமிழால் போற்றி உன்னை அன்புடனே துதிக்க (விரும்பும்) மனநிலையை அருள் புரிவாயாக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைத்துள்ள தான தவநிலை உணர்ச்சியைத் தந்து அடிமை யாகிய நான் முத்தி நிலையைப் பெறவேண்டி சந்திர வெளியைக் காணும்படியான வழியை (க் காட்டி) அருள் புரிவாயாக.

பல்லக்கு, பெருமை, கௌரவம், இவைதமை எட்டுத்திக்கில் உள்ளோரும் மதிக்கும்படியாக ஓங்கும் சிறப்பு வகையில் அருள் புரிவாயாக.

மாதர்களின் (கலவி) இன்பமே மிக்க இனிமை தருவதாம் என்று நினைக்கின்ற என் மனம், உன்னை நினைத்து நிலையாய் அங்ஙனே இருக்க அருள்புரிவாயாக.

நாட்டு அதிகாரிகள் (அரசர்கள்) இரவும் பகலும் வர, (அவர் களுக்கு சுகம் தருவதான காப்பு (பாதுகாப்புப்) புரிதல்வேண்டி அவர்கள் என்னை வந்து அணைய, காண அவர்களுக்கு வேண் டிய சுபரக்ஷை தரவல்ல) புத்தியை எனக்கு அருள் புரிவாயாக.

கொங்கு தேயத்தில் உயிர் (மீளப்) பெற்று, (உடல்) வளரப் பெற்று, தென்கரை நாட்டுத் திருப்புக்கொளியூர் அவினநாசி அப்ப ராம் சிவபிரானது திருவருளைப் பெற்று; முதலையுண்ட பாலகனு டைய உடலில் உயிர் பொருந்திவந்த இரகசிய நிகழ்ச்சிப் பொருள்களை எனக்கு அருள் புரிவாயாக.

யானை முகப் பெருமான் (கணபதிக்கு) இளையவனாம் கந்த (வேள்) என ஜெயப்புகழ் பெற்ற பெருமாளே! கொங்கணகிரி என்னும் மலையில் வீற்றிருக்கும் பெருமாளே!



**வேலும் மயிலும் துணை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவாதிரை நிவேதனம் களி

அம்பலத்திலே உலகின் இயக்கத்துக்காகப் பஞ்ச கிருத்திய திருத்தாண்டவம் செய்துகொண்டிருக்கும் சபாநாயகருக்கு உகந்த திருநாட்களில் முக்கியமான நாள் திருவாதிரை. முன்பு ஒரு காலத்திலே தாருகாவனம் என்ற காட்டிலே இருக்கும் முனிவர்கள் சிவபெருமானை மதியாது யாகம் செய்து, அதன் மூலம் மதயானை, தீ, உடுக்கை, சர்ப்பம், முயலகன் முதலானவற்றை உற்பத்திசெய்து அவரை அழிப்பதற்காக அனுப்பினார்கள். அவற்றில் மதயானையை உடையாக உரித்துப் போர்த்தும், முயலகனை வலது காலினால் மிதித்து வைத்தும் மற்றவற்றைத் தமது அவயங்களில் தாங்கியும், இடது காலை மேலே தூக்கியும், அவர்களுக்கு முன் சிவபெருமான் நின்ற நிலையே நடராஜ வடிவம். இதுவே பிரபஞ்சங்கள் எல்லாவற்றையும் தன்னகத்தே கொண்ட பெரு வடிவம். இந்தத்தரிசனம் மார்கழி மாதத்து திருவாதிரை நட்சத்திரத்தில்நடைபெற்றமையால்சிவபெருமானுக்கு உயர்ந்த அபிஷேக நாளாக இந்தத் திருவாதிரை நாள் கொண்டாடப்படுகின்றது.

திருவாதிரை 27 நட்சத்திரங்களில் ஆறாவதாக வருவது. இதனை ஒரியன் *(orionis)* என விஞ்ஞானத்தில் அழைப்பர். மூதிரை, செங்கை, யாழ், ஈசன்தினம், அரன்நாள், ஆதிரை என்று எல்லாம் தமிழ்ப் பெயர்களால் அழைக்கப்பட்டமையை நிகண்டுகளான திவாகர நிகண்டு, பிங்கல நிகண்டு முதலியன குறிப்பிடுகின்றன. தமிழ் ஆதிரையைக் கொண்டே சம்பந்தரும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**"ஆதிரைநாள் காணாது போதியோ பூம்பாவாய்"** என்று பாடி இருக்கின்றார்.

திருவாதிரையில் உற்சவம் கொண்டாடி சங்கத் தமிழர்கள் மகிழ்ந்ததைப் பரிபாடல் என்னும் சங்க நூல் குறிப்பிட்டு இருக்கின்றது.

**பரிபாடலில் வரும் பதினோராவது பாடலில்**
**"ஞாயிறு காயா நளிமாரிப் பிற்குளத்து**
**மாயிருந் திங்கண் மறுநிரை யாதிரை**
**விரிநூல் அந்தணர் விழவு தொடங்கப்...."**

எனக் குறிப்பிட்டுத் திருவாதிரை விழா மக்களாலே சிறப்பாகக் கொண்டாடப்பட்டதைக் குறிப்பிட்டு இருக்கின்றது.

ஆரம்பத்தில் திருவாதிரையைத் தனிவிழாவாகக் கொண்டாடிய மக்கள் மத்தியில் அது பத்துத்தினங்கள் கொண்டாடும் பெருவிழாவாக, திருவெம்பாவை உற்சவம் என வளர்ச்சி கண்டது. மார்கழித் திருவாதிரையை ஈறாகக் கொண்டு அதற்கு முன்னர் 9 நாட்கள் உற்சவம் செய்து திருவாதிரையன்று பூர்த்தியாக்கிக் கொள்வர்.

இந்தத் திருவெம்பாவைக் காலத்தில் 3ஆம் நாள், 6ஆம் நாள், 10ஆம் நாள் ஆகிய மூன்று நாட்களும் சிவபெருமானுக்கு முறையே சருக்கரைச் சாதம், பிட்டு, களி என்பவற்றை நிவேதனம் செய்து வழிபடுகின்றோம். இம் மூன்று நாட்களிலும் இவற்றை ஏன் வைத்து வழிபடுகின்றோம் எனில், முதல் இரண்டுக்கும் ஒவ்வொரு சம்பவத்தைக் குறிப்பிடுகின்றது திருவாதவூரடிகள் புராணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாம் நாள் **"திருவாதவூரடிகளுக்குச் சிவபெரு மான் குருவாக வந்து மரநிழலை உகந்த இடமாகக் கண்டமர்ந்து ஞானத்தை அருளிய பின்; சிவபெருமா னுக்கு வாதவூரர் பருப்பு, தேங்காய்த் துருவல், சருக்கரை, பசுவின் பால். அரிசி ஆகியவற்றைக் கலந்து சமைத்த திருவமுதைக் கொடுத்து உண்பித்தமையைக் குறிப்பி டவே"** சருக்கரை அமுதைப் படைக்கின்றோம். இதனைத் திருவாதவூரடிகள் புராணம்.

**"பருப்புடன் நாளிகேரப் பழஞ் செருத் துருவல் சேர்த்து**
**சருக்கரை கலந்து பாலில் சமைத்த நல் அமுது தன்னை**
**இருத்திய கனகக் கால்மேல் இலங்கு பொற் கலத்தின்மீது**
**விருப்பொடு படைத்து நெய்யும் மிக்கமுக் கனியும் பெய்து"**

எனக் குறிப்பிடுகின்றது. அதேபோல ஆறாவது நாள் பிட்டே உணவாகப் படைத்து வழிபடுகின்றோம். மதுரை நகரிலே வைகை நதியானது பெருக்கெடுத்து வந்து நகரிலே பல அழிவுகளைச் செய்த பின் வைகை நதிக்கு அணைகட்ட பாண்டிய நாட்டில் உள்ளவர்கள் அனை வரையும் அழைத்துப் பாண்டிய மன்னன் ஆணையிட, அங்கிருந்து செம்மனச் செல்வி என்னும் பொன்னான வள் **"யான் தனியேன், என் செய்வேன்"** என ஏங்க, சிவபெருமானே கூலியாளாய் வந்து நான் உன் பங்கை அடைத்து விடுகின்றேன். நீ எனக்கு என்ன தருவாய்? என்று கேட்க

**"இந்தவாறு அமுதம் போலும் இனிய பிட்டு அளிப்பேன் அல்லால்**
**அந்திவா இதனை விற்றே அளிப்பனின் கூலி"**

என்று சொல்ல, இறைவனாகிய கூலியாள் "தாயே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நான் பெரும் பசியுடையேன் எனக்கு நீ பிட்டையே தா" என்று

**"இரும்பசியுடையேன் அன்னே இனிய பிட்டவிப்பேயாகில்**
**குரம்பு கொண்டடைப்பேன் யானே கோவறை முழுதும் என்ன**
**கரும்புறத் துகில் மேல் இட்ட பிட்டினைக் கரத்தால் அள்ளி**
**விரும்பியிங்கிதனைக் கொள்வாய் என்றனள் விருப்பமிக்காள்"**

*(திருவாதவூரடிகள் புராணம்)*

என்பதற்காக ஆறாம் நாள் பிட்டை நிவேதனமாக சிவ பெருமானுக்குப் படைக்கின்றோம்.

அதேபோல பத்தாம் நாள் திருவாதிரையன்று ஏன் களியை உணவாகப் படைக்கின்றோம் என்றால், அதற்கு ஒரு காரணம் உண்டு. ஒன்பதாம் திருமுறையில் வரும் திருவிசைப்பாவில் மூன்று பதிகங்களையும் திருப்பல் லாண்டையும் அருளிச் செய்தவர் சேந்தனார். ஓடு தொடர் புடைய சம்பவம் ஒன்று காரணமாக உள்ளது.

திருவெண்காடு என்னும் ஊரிற் பட்டினத்தடிகள் பெரும் தனவந்தராக இருந்தபோது அவருக்குத் தலைமை முதன்மைக் கணக்காளராக இருந்தவர் திருவெண் காட்டை அடுத்துள்ள நாங்கூர் என்ற இடத்தில் பிறந்த சேந்தனார். இவர் ஒரு சமயம் பட்டினத்தடிகளின் கட் டளையின் பிரகாரம் அவரது கருவூலத்தைத் திறந்து அனைவரையும் பொருளை எடுத்துச் செல்லவிட்டார். இதனால் கோபம் கொண்ட பட்டணத்து அடிகளின் உறவினர்கள் சேந்தனாரைச் சோழ மன்னனிடம் காட் டிக்கொடுத்துச் சிறை வைத்தார்கள். சேந்தனார் சிறையிலி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்து வருந்துவதையறிந்த பட்டணத்தடிகள்

**"மத்தளை தயிருண்டானும் மலர்மிசை மன்னினானும்**
**நித்தமும் தேடிக்காணா நிமலனே அமலமூர்த்தி**
**செய்த்தலைக் கயல்பாய் நாங்கூர்ச் சேந்தனை வேந்தனிட்ட**
**கைத்தளை நீக்கி என்முன் காட்டு வெண்காட்டுளானே"**

எனத் திருவெண்காட்டு இறைவனை வணங்கி, அவரது சிறை இருப்பை இறையருளாலே விடுதலை செய்தார்.

சிறை இருந்து விடுதலை பெற்றபின் சேந்தனார் தன் குடும்பத்தாரோடு தில்லையிலே சென்று வாழக் கருதி அங்கே குடியேறினார். அங்கு இருக்கும் காலத்திலே தினமும் சீவனோபாயத்துக்காக விறகு வெட்டி வருமானம் பெற்றார். விறகை விற்று வந்த பணத்தில் உணவைச் சமைத்து முதலிற் சிவனடியார் ஒருவருக்கு திருவமுது செய்வித்துப் பின்னரே தாம் உண்டு வந்தனர்.

ஒரு சமயம் மார்கழி மாதத் திருவெம்பாவை உற்சவம் சிதம்பரத்திலே கோலாகலமாக நடைபெற்றுக் கொண்டிருந்தபோது திருவாதிரைக்கு முதன் நாள் ஒரே மழை. மழையின் காரணமாக சேந்தனார் விறகு வெட்டச் செல்லவில்லை. அன்று வருமானமும் இல்லை. சிவனடியாருக்கு திருவமுதும் செய்யவில்லை. மாலை சூழ்ந்து இரவு வரத் தொடங்கியது. மழை ஓய்ந்தபாடில்லை. இதனால் மனம் வருந்திய சேந்தனார், வீட்டில் மிச்சமாக வைத்திருந்த கேள் வரகு மாவில் களியைச் சமைத்து யாராவது சிவனடியார் வருவாரா என ஏங்கி நின்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த நேரம் அம்பலவாணனே சிவனடியாராக வேடம் இட்டுச் சேந்தனார் இல்லம் வந்து, அவர் இட்ட களியை உண்டபின் மீதிக்களியைத் தனக்கு அடுத்தவேளை உணவுக்கும் வேண்டும். நீர் அதனைத் தரவேண்டும் என வேண்டிச் சென்றார். அன்று இரவு சோழ மன்னனின் கனவிலே தோன்றித் தான் சேந்தனாரின் இல்லம் சென்று களி உண்ட வரலாற்றைக் கூறியதோடு மட்டு மல்லாமல், சிதம்பரத்தின் கருவறைக்குள் களியின் சிறு துகள் களையும் தனது முகத்தில் களியினையும் கொண்டு மறுநாள் அதிகாலை திருவாதிரை அபிஷேகத்திற்கு வந்த தில்லைவாழ்மூவாயிரவர்களுக்கும்காட்டியருளினார்.

இதைக் கண்ட தில்லைவாழ் மூவாயிரவர்கள் அதிர்ச்சி கொண்டு இச்செய்தியை வெளியிற் கூற செய்தி காற் றிலும் கடிதாய் சோழ மன்னனிடம் சென்றது. மன்னன் தான் இரவு கண்ட கனவை எண்ணி கனவிலே கண்ட சம்பவந் தான் நனவிலே நடக்கின்றது என மனம் மகிழ்ந்து சேந்தனாரைக் கண்டு பிடிக்க சேவகர்களை அனுப்பினார்.

இவை யாதொன்றையும் அறியாத சேந்தனார், திருவா திரைத் தேர் ஓட்டத்தைக்காணச் சிதம்பரம் வந்துவிட் டார். முதல் நாள் நல்ல மழையாலே சிதம்பர வீதிகள் எல்லாம் சேறும் சகதியுமாக மாறின. இதனால் திருவா திரைத்தேர் ஓடாது நிற்க, இறைவனே அசரீரியாக "சேந் தனார் நீ பல்லாண்டு பாடினால் தேர் ஓடும்." என உரைக்க, சேந்தனார் 'மன்னுக தில்லை" எனத் தொடங்கி பதின்மூன்று திருப்பல்லாண்டுப் பாடல்களைப் பாடி, தேரை ஓட வைத்தார். திருவாதிரை நாளில் சேந்தனா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரின் களியை உண்டு அவர் பாடிய திருப்பல்லாண்டைக் கேட்டு மகிழ்ந்து, இறைவனார் தேர் ஓடினார் என்ப தனால், இன்று வரையும் திருவாதிரை ஆருத்திரா அபிஷே கம் முடிந்த பின்னர் சிவபெருமானுக்குக் களியை உண வாகப் படைத்து வழிபடுகின்றோம்.

சேந்தனார் இல்லத்திற் சிவபெருமான் களியமுதை உண்ட வரலாற்றைக் கோயிற் திருப்பன்னியார் விருத் தம்என்னும் நூல்

**"செம்பொன் அம்பலத்து வேந்தன் தனக்கு உண வாகக் களி தந்து ...."** எனவும், சிவஞான முனிவர் தனது பாடல் ஒன்றிலே சேந்தனார் வீட்டில் சிவபெருமான் தவிட்டமுது (தவிட்டால் செய்த களி) யை உண்டார்.

**'வரையேற விட்டமுதம் சேந்தனிடம் உண்டானை"** எனவும் பாடியிருக்கக் காண்கிறோம்.

களியானது சிவபெருமானுக்கு மட்டுமன்றி விநாய கப் பெருமானுக்கும் உகந்ததாகும். விநாயகர் சஷ்டி விர தப் பூர்த்தியிலே வள்ளிக்கிழங்கு, இராசவள்ளி முதலா னவற்றாற் களி சமைத்துப் படைத்து வணங்கி வரும் வழக்கமும் உண்டு.

சைவ சித்தாந்த பண்டிதர்,
அராலியூர்
**கணேசமங்களமூர்த்தி.**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேவி Printers, Jaffna. 021 300 3030

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org